No. of Printed Pages : **4**

**BESE-046**

00391

# இளநிலை கல்வியியல்
# பருவத்தேர்வு (B.Ed.)
## Term-End Examination
## June, 2016

## BESE-046 : தமிழ் கற்பித்தல்
## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

குறிப்பு :

(i) எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

(ii) எல்லா கேள்விகளும் இணையான மதிப்பீடு செய்யப்படுகின்றன.

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

நல்ல கையெழுத்தின் நல்லியல்புகள் யாவை ? இத்திறனை வளர்க்க வகுப்பறையில் நிவீர் பயன் படுத்திய முறைகளைக்கூறுக.

**அல்லது**

தாய்மொழியாசிரியர்கள் மொழியைக் கற்பிக்கும் முன்னர் கற்பிக்கவேண்டிய நோக்கங்களை அறிந்து கற்பித்தல் மிகவும் இன்றியமையாதது- விளக்குக.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

தமிழ் கற்பித்தலில் நடிப்பு முறையை எவ்வா-றெல்லாம் பயன் படுத்துவீர் என்பதை விளக்குக. இதன் நிறைகுறைகள் யாவை ?

**அல்லது**

" உரைக்கப்படும் பொருள் உள்ளத் தமைத்து" என்பதற்கேற்ப பாடக்குறிப்பு திட்டமிட்டு தயாரித்தல் இன்றியமையாதது. இக்கூற்றிற்கேற்ப பாடக்குறிப்பின் இன்றியமை-யாமையை விளக்குக. பாடக்குறிப்பின் பயன்-கள் யாவை ?

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் எவையேனும் **4** (நான்கு) வினாக்களுக்கு **150** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(a) கற்பித்தலில் வினாக்கள் பெறும் இடம் யாது ? வினாக்களைத் திறமையான ஓர் ஆசிரியர் எங்ஙனம் கையாளுவார் ?

(b) வாய்விட்டுப் படித்தலின் இயல்புகள் யாவை ? அதன் நிறைகுறைகளைக் கூறுக.

(c) பிறர் உதவி பெற்றும் பெறாமலும் எழுதும் கட்டுரை என்றால் என்ன ? சான்று தந்து விளக்குக.

(d) குறையறித் தேர்வு என்றால் என்ன ? அதன் பயன்கள் யாவை ?

(e) உரையாடலைச் சிறந்ததொரு வாய்-மொழிப் பயிற்சியாக எவ்வாறு கையா-ளலாம் ?

(f) செய்யுள் கற்பிக்கும் முறைகளை விளக்கவும்.

(g) நல்ல தேர்வின் இன்றியமையாப் பண்-புகள் யாவை ?

(h) கேட்டெழுதும் பயிற்சியின் நோக்கங்கள் யாவை ? கேட்டெழுதும் பயிற்சி எப் போது தரப்படுதல் வேண்டும் ?

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற் களுக்கு மிகாமல் விடைதருக.

அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல்
வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல்
வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல்
வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல்
வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண்
டுவனே

(a) மேலே தரப்பெற்ற செய்யுளை மாணவர்களிடையே எவ்வாறு அறிமுகம் செய்வீர் ?

(b) செய்யுளின் பொருளை உணர்ந்துகொண்டார் களா என அறிய நீவிர் விடுக்கும் இரு வினாக் களையும் அவற்றிற்கான விடைகளையும் குறிக்க.

(c) பாராட்டும் திறனை அறிய நீவிர் விடுக்கும் இரண்டு வினாக்களையும் அவற்றிற்கான விடைகளையும் எழுதுக.